**C.C. No. 141/2020** நாள் : 12/03/2021

அ.சா.1 திரு. செந்தில்

<u>முதல் விசாரணை</u>

நான் சோளக்கொட்டாயில் குடியிருந்துக்கொண்டு K.P.N. Travels ல் கிளீனராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 1ம் எதிரி எனது தகப்பனார் ஆவார். 2 வது எதிரி 1ம் எதிரியிடம் வேலை பார்க்கும் நபர் ஆவார். கடந்த 01/10/2019 ம் தேதியன்று எனது மகள் அனுஷ்கா இறந்துவிட்டார். அவரை அடக்கம் செய்த சுடுகாட்டில் கடந்த 14/10/2019 ம் தேதியன்று சுமார் 04.00 மணியளவில் நானும், அன்பரசன், மாதம்மாள், திவ்யபாரதி ஆகியோர் நடுப்பட்டியில் உள்ள சுடுகாட்டிற்கு சென்று எனது மகளை புதைத்த இடத்தில் பூஞ்செடிகளை வைக்க 1ம் எதிரியின் வீட்டின் வழியாக சென்றோம். இங்க எதுக்குடா வந்த தேவடியா பையா என்று 1ம் எதிரியும், எனது அக்காள் முனியம்மாள் (எ) அக்குமணி என்பவரின் மகன் கார்த்திக் என்பவரும் தகாத வார்த்தைகளால் திட்டி என்னை தடுத்து நிறுத்தினார்கள். அப்பொழுது 1 வது எதிரி கையால் வலது பக்க முழங்கையில் கல்லால் அடித்தார். கார்த்திக் இடது முழங்கையில் கல்லால் அடித்தார். தடுக்க வந்த எனது மச்சான் அன்பரசனையும், 1 வது எதிரியும் கார்த்திக் என்பவரும் கல்லால் அடித்தார்கள். மேலும் 2 வது எதிரி என்னை கல்லால் முகத்திலும் உடம்பிலும் குத்தி உள்காயம் ஏற்படுத்தினார். மேலும் எதிரிகள் இனிமேல் இந்த இடத்திற்கு வந்தால் உன்னை கொலை செய்துவிடுவோம் என மிரட்டினார்கள். பின்பு அருகிலிருந்த நபர்கள் என்னையும், சாட்சி அன்பரசனையும் தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்தபொழுது மதிகோண்பாளையம் போலிசார் என்னை விசாரித்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**